**நிகழும் திருவள்ளுவராண்டு விளம்பி வருடம் 2019ம் ஆண்டு ஜனவரி மாதம் 21ம் தேதி தை மாதம் 7ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ள தாராபுரம் நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் விபரம்.**

----

1. தாராபுரம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் கட்டப்பட்டு வரும் சிறு உரக்கிடஙகு வளாகத்திற்கு தண்ணீர் வசதி மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு தொட்டிகள் அதற்கான குழாய்கள் வகைப்படுத்தப்பட்டுள்ள மதிப்பீட்டில் இடம்பெறவில்லை. எனவே, இப்பணிகளுக்கான தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | சிறு உரக்கிடஙகு அமைந்துள்ள இடம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | சந்தைப்பேட்டை சிறு உரக்கிடஙகு வளாகம் | ரூ. 5,00,000 |
| 2 | வீட்டு வசதி வாரிய சிறு உரக்கிடஙகு வளாகம் | ரூ. 5,00,000 |

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2. தாராபுரம் நகராட்சி தூய்மை பாரத திட்டத்தின் கீழ் நகராட்சி உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை நவீன முறையில் (Bio-Mining) சுத்தம் செய்து உரக்கிடங்கினை புதுப்பிக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. Swachh Bharat Mission (SBM) – 8th State High Powered Committee (SHPC) – Minutes of Meeting Roc.No.38984/2014/P1 Date:11.01.2019இல் ரூ.279.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு பெறவும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்:411/2017/இ1**

அலுவலகக் குறிப்பு

1) மன்றம் அனுமதி வழுங்கலாம்
2) இந்நகராட்சி பங்களிப்பு தொகை நிர்ணய சதவீதத்தினையும் மன்றம் ஏற்கலாம்.

3.தாராபுரம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தாராபுரம் நகராட்சிக்குட்பட்ட குப்பைக்கிடஙகு வளாகத்தில் 30 KLD கொள்ளளவு கொண்ட மனித கழிவு (கசடு) சுத்திகரிப்பு நிலையம் FSTP (Faecal Sludge Treatment Plant) அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக

ஆணையர் சென்னை நிர்வாக அனுமதி கடித ந.க.எண்.26888/UGSS-2/2018 நாள்.12.11.2018ன் படி ரூ.297.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியதையடுத்து தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் தொழில் நுட்ப அனுமதி கடித ந.க.எண்.3934/2018/பி1, நாள்.14.11.2018ன் படி 10.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

1 திருவாளர்கள்.எம்.முருகேசன் அன் கோ, ஈரோடு,

2 திருவாளர்கள்.அக்சயா அசோசியட்ஸ், சேலம்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் இந்நகராட்சி கூர்ந்தாய்வு குழுவினரால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளது. எனவே, தொழில்நுட்ப தகுதி பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களுக்கு அறிவிப்பு வழஙகி விலை விகித உரை 18.01.2019 அன்று மாலை 4.00 மணியளவில் திறக்கப்பட்டது. அதில் கீழ்கண்டவாறு உள்ளது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள்.எம்.முருகேசன் அன் கோ, ஈரோடு | மதிப்பீட்டை விட 5.19% அதிகம் |
| 2 | திருவாளர்கள்.அக்சயா அசோசியட்ஸ், சேலம். | மதிப்பீட்டை விட 7.26% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் அதாவது மதிப்பீட்டை விட 5.19% அதிகம் என்ற அளவில் திருவாளர்கள்.எம்.முருகேசன் அன் கோ, ஈரோடு அவர்கள் கோரியுள்ளார்.

இப்பணிக்கான மதிப்பீடு 2018–19 ஆண்டு பொதுப்பணித் துறையின் தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணையின் படி தயார் செய்யப்பட்டதாகும். மேற்கானும் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 5.19% அதிகம் என்ற நிலையில் உள்ளது. எனவே, நகராட்சி பொறியியல் கையேட்டில் தெரிவித்துள்ளபடி ஒப்பந்தப்புள்ளி விதிகளில் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்தைவிட கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்ள இயலாத நிலை காரணமாக குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர் திருவாளர்கள்.எம்.முருகேசன் அன் கோ, ஈரோடு, அவர்களுக்கு இவ்வலுவலக ந.க.எண்.4065/2018/இ1 நாள்.18.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை குறைத்துத்தரக் கோரி விலைக்குறைப்புக் கடிதம் (Negotiation Letter) வழஙகப்பட்டது. அதன்படி ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது விலைக்குறைப்பு கடிதம் நாள்.18.01.2019ல் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை 4.63% குறைத்துக் கொடுத்துள்ளார்.

மேற்படி விலைக் குறைப்பு செய்ததை தொடர்ந்து இரண்டாம் முறையாக மீண்டும் விலைக்குறைப்பு செய்து தரக்கோரி 21.01.2019 அன்று விலைக்குறைப்புக் கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது கடிதம் நாள்.21.01.2019ல் பணியாளர்களின் கூலி விகித ஏற்றம், சிமெண்ட், மணல் விலை ஏற்றம் காரணமாக மேலும் விலை விகிதத்தை குறைத்து தர இயலாது என்றும் தான் ஏற்கனவே குறைத்து கொடுத்த மதிப்பீட்டைவிட 4.63% அதிகம் என்ற விலை விகிதத்திற்கு அனுமதி அளிக்குமாறும் கேட்டுள்ளார்கள்.

எனவே மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி பெற வாய்ப்பு இல்லை என்பதாலும் மேற்கண்ட பணி திட்டப்பணியாக உள்ளதால் பணியினை விரைந்து முடிக்கும் பொருட்டும் மேலும் பொதுமக்களின் நலன் கருதியும் திருவாளர்கள்.எம்.முருகேசன் அன் கோ, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்கண்ட ஒப்பந்ததாரர் கோரியுள்ள மதிப்பீட்டைவிட 4.63% கூடுதலாக பெற்ற விலை விகிதத்திற்கு மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

2) மேற்கண்ட பணியில் மதிப்பீட்டை விட கூடுதலாக வரப்பெறும் தொகையினை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்:**4065/2018/இ1**

**4.** தாராபுரம் நகராட்சி தூய்மை பாரத திட்டத்தின் கீழ் நகராட்சியில் முதன்மை சேகரிப்பு பணிகளில் அனைத்து வீடுகளிலும், **100** சதவீதம் குப்பை சேகரிக்கத் தேவையான பேட்டரி மூலம் இயஙகும் வாகனம் வாஙகும் பணிக்கு ரூ.**50.40** இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதன் படி தூய்மை பாரத இயக்கம்(SBM) – 8th State High Powered Committee (SHPC) – Minutes of Meeting ந.க.எண்.38984/2014/P1 Date:11.01.2019-ன் படி ரூ.**50.40** இலட்சத்திற்கு ஒப்புதல் வழஙகப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்:2271/2018/இ1**

5. தாராபுரம் நகராட்சியில் குடிநீர் நிதி **2018–19**ன் கீழ் குடிநீர் உபயோகத்திற்கான (Sodium hypo chlorite) திரவ குளோரின் விநியோகம் செய்யும் பணி மற்றும் திரவ குளோரினேசன் இயந்திரம் வருடாந்திர பராமரிப்பு பணிக்கு ரூ.**9.90** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு **13.11.2018** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | M/S.Sruthi Alum Industry<br>ஒப்பந்ததாரர், சென்னை. | மதிப்பீட்டு விலையை விட **2.86** % அதிகம் |
| 2 | M/S.Tamilnadu Chemicals Industries<br>ஒப்பந்ததாரர், சென்னை. | மதிப்பீட்டு விலையை விட **0.36** % குறைவு |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.36 % குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள M/S.Tamilnadu Chemicals Industries, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழஙகியதையும் மன்றம் அஙகீகரிக்கலாம்.

6. தாராபுரம் நகராட்சியில் பாரளுமன்ற உறுப்பினர் வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டம் 2018–19ன் கீழ் தாராபுரம் நகராட்சி வார்டு எண் 12 உப்புத்துரைபாளையம் 10,000 லிட்டர் மேல்நிலைத் நீர் தேக்கத் தொட்டி அமைக்கும் பணிக்கு ரூ.3.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 27.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு. எம்.மாரிமுத்து,<br>ஒப்பந்ததாரர், தாராபுரம். | மதிப்பீட்டு விலையை விட 0.08 % குறைவு |
| 2 | திரு.ஆர்.வெஙகிடுசாமி,<br>ஒப்பந்ததாரர், தாராபுரம். | மதிப்பீட்டு விலையை விட 0.87 % அதிகம் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.08 % குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு.எம்.மாரிமுத்து, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

7. தாராபுரம் நகராட்சி தூய்மை பாரத திட்டம் திடக்கழிவு மேலாண்மை பணிகளாக முதன்மை குப்பை சேகரிப்பு பணிக்கு மின்கலன் மூலம் இயங்கும் வாகனம் 21 எண்ணிக்கையில் வாஙகப்பட்டது. மின்கலன் மூலம் இயங்கும் வாகனத்தை சார்ஜ் செய்வதற்கு மின் வசதி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.17500/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்: 5786/2019/இ1**

அலுவலகக் குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) இப்பணியை ஒப்படைப்பு பணியாக நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.ஸ்ரீ சக்தி விநாயகர் கண்ஸ்ட்ரக்சன், அன் வுட் ஒர்க்ஸ், தாராபுரம்

ஒப்பந்ததாரர் வசம் ஒப்படைப்பு செய்து பணியினை முடிக்க மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

8. தாராபுரம் நகராட்சிக்கு உட்பட்ட மேற்கு பலிஜிவார் தெருவில் உள்ள நகராட்சி தொடக்க பள்ளியில் குடிநீர் வழங்கும் பொருட்டு அங்குள்ள ஆழ்துளை கிணறு மற்றும் மோட்டார் பழுதுகளை சரி செய்து மீண்டும் பொருத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.22,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணியினை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இப்பணியினை ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.எம்.சசிக்குமார் என்பவர் வசம் ஒப்படைப்பு செய்து பணி முடிக்கவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

9. தாராபுரம் நகராட்சிக்கு உட்பட்ட ராமசாமி பூஙகா பகுதியில் புதிதாக ஒய்வு கூடாரம் அமைக்கும் பணிக்கு ரூ.4.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 04.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.ஆர்.தஙகராஜ்,<br>ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 0.12% குறைவு |
| 2. | திரு.எ.கணேசன்,<br>ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டு விலையை விட 0.30% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவாக கொடுத்துள்ள திரு.ஆர்.தஙகராஜ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

10. தாராபுரம் நகராட்சி, எல்லைக்குட்பட்ட வார்டு 1 முதல் 10 வரை உள்ள பகுதியில் குடிநீர் விநியோக குழாய்கள், போர்வெல் குழாய்கள், மின் மோட்டார் குழாய்கள், மற்றும் கைப்பம்புகள் ஆகியவைகளில் ஏற்படும் கசிவுகள் குழாய் உடைப்புகள் பழுதுகள் மற்றும் மராமத்துப் பணிகளை அவ்வப்போது உடனுக்குடன் சரி செய்ய வேண்டியுள்ளது.

மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தனியாக பணியாளர்கள் இல்லை. எனவே ஓப்பந்த அடிப்படையில் இப்பணியை செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு மன்ற நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்படி பணி மேற்கொள்ள ஆகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் விநியோக நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழஙகலாம்.

11. தாராபுரம் நகராட்சி, எல்லைக்குட்பட்ட வார்டு 11 முதல் 20 வரை உள்ள பகுதியில் குடிநீர் விநியோக குழாய்கள், போர்வெல் குழாய்கள், மின் மோட்டார் குழாய்கள், மற்றும் கைப்பம்புகள் ஆகியவைகளில் ஏற்படும் கசிவுகள் குழாய் உடைப்புகள் பழுதுகள் மற்றும் மராமத்துப் பணிகளை அவ்வப்போது உடனுக்குடன் சரி செய்ய வேண்டியுள்ளது.

மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தனியாக பணியாளர்கள் இல்லை. எனவே ஒப்பந்த அடிப்படையில் இப்பணியை செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு மன்ற நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்படி பணி மேற்கொள்ள ஆகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் விநியோக நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

12. தாராபுரம் நகராட்சி, எல்லைக்குட்பட்ட வார்டு 21 முதல் 30 வரை உள்ள பகுதியில் குடிநீர் விநியோக குழாய்கள், போர்வெல் குழாய்கள், மின் மோட்டார் குழாய்கள், மற்றும் கைப்பம்புகள் ஆகியவைகளில் ஏற்படும் கசிவுகள் குழாய் உடைப்புகள் பழுதுகள் மற்றும் மராமத்துப் பணிகளை அவ்வப்போது உடனுக்குடன் சரி செய்ய வேண்டியுள்ளது.

மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தனியாக பணியாளர்கள் இல்லை. எனவே ஒப்பந்த அடிப்படையில் இப்பணியை செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு மன்ற நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்படி பணி மேற்கொள்ள ஆகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் விநியோக நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

13. தாராபுரம் நகராட்சி, எல்லைக்குட்பட்ட 16 முதல் 30 வார்டு பகுதிகளில் பொது மக்களின் பயன்பாட்டிற்கு குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்காக 135 எண்ணிக்கையில் ஆழ்துளை கிணறுகள் அமைத்து மின் மோட்டார் பொருத்தி இயக்கப்பட்டு வருகிறது. மேற்காணும் பகுதியில் உள்ள ஆழ்துளை கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள மின் மோட்டார்கள், மோட்டார் ஒயர்கள், குழாய்கள், மின் இணைப்பு ஒயர்கள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய வேண்டியுள்ளது.

மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தனியாக பணியாளர்கள் இல்லை. எனவே ஒப்பந்த அடிப்படையில் இப்பணியை செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்ற நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

14. தாராபுரம் நகராட்சிக்குட்பட்ட மார்க்கெட் டேங்க் மற்றும் உப்புத்துறைபாளையம் பகுதியில் அமைந்துள்ள மேல்நிலைத் தொட்டிக்கு திரவ குளோரின் அமைக்கும் பணிக்கு அஙகுள்ள அறைகள் பழுது பார்க்கும் பணி செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள தொகை ரூ.1.40 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணி குடிநீர் அத்தியவாசியப் பணியாக இருப்பதாலும், பணியின் அவரசம் அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு (15)—ன் கீழ் மார்க்கெட் டேங்க் மற்றும் உப்புத்துறைபாளையம் பகுதியில் உள்ள அறை பழுது பார்த்தமைக்கு தொகை ரூ.1,31,400/—ஐ ஒப்பந்ததாரர் திரு.எ.கணேசன் அவர்களுக்கு வழஙகியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

15. தாராபுரம் நகராட்சிக்கு உட்பட்ட அமராவதி ஆற்று பகுதியில் விநாயகர் சதுர்த்தி விழாவிற்கு விநாயகர் சிலைகளை ஆற்றில் 14.09.208, 15.09.2018 ஆகிய இரு தினஙகளில் ஆற்றில் கரைக்க தேவையான மின்விளக்கு வசதிகள் மற்றும் ஆற்றில் மக்கள் பாதுகாப்பாக ஒருபுறம் மட்டும் செல்ல மூஙகில் கம்பு தடுப்புகள் ஏற்படுத்தி கொடுக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே, பணியின் அவரச அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு (15)—ன் கீழ் மூஙகில் தடுப்புகள் அமைக்கும் பணிக்கு தொகை ரூ.39200/—ஐ ஒப்பந்ததாரர் திருவாளர்.ஸ்ரீமுருகன் சவுண்ட் சிஸ்ட்ம் அன்டு ஸ்டேஜ் டெக்ரேட்டர்ஸ் அன்டு ஜெனரெட்டர் அவர்களுக்கு வழஙகியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

16. தாராபுரம் நகராட்சிக்கு சொந்தமான பார்க் ரோட்டில் உள்ள புதியதாக கட்டப்பட்டுள்ள நகராட்சி அலுவலக கட்டிடத்தின் முகப்பு பகுதியில் 80 சதுரடி அளவில் ஆர்சிசி கட்டிடத்தில் ஏடிஎம் மிஷின் மாத வாடகை ரூ.8000க்கு வைத்துக்கொள்ள இந்தியன் வங்கி, தாராபுரம் கிளை மேலாளர் அவர்கள் சம்மத கடிதம் வழங்கியுள்ளார். எனவே, புதிய நகராட்சி அலுவலகத்தின் முகப்பு பகுதியில் பஞ்சாப் நேசனல் வங்கி தாராபுரத்திற்கு ஏடிஎம் வைக்க அனுமதி பெறப்பட்ட இடத்தின் அருகாமையில் நகராட்சியின் கணக்குகள் வைத்துள்ள இந்தியன் வங்கிக்கும் ஏடிஎம் மிஷின் வைத்துக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் வழியாக உரிய கருத்துரு அனுப்பி ஒப்படைப்பு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.2799/2018/அ3**

17. தாராபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மற்றும் பொறியாளர் பிரிவில் இயங்கும் வாகனங்களை இயக்க, மாவட்ட ஆட்சியர் அவர்களின் விலை நிர்ணயப்படி ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் 04.01.2019ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விகிதம் | தொகை |
|---|---|---|---|
| 1 | எஸ்.கே.எண்டர் பிரைசஸ் , திண்டுக்கல். | நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு | ரூ.648.00 |
| 2 | அவர்லேண்டு இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சென்னை | நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு | ரூ.545.32 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள அவர்லேண்டு இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சென்னை நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியில் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு தொகை.ரூ.545.32க்கு வழங்கப்பட்டுள்ளதை ஏற்கவும், மேற்படியாருக்கு 01.02.2019 முதல் ஓராண்டிற்கு பணி உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**ந.க.எண்.953/2018/எச்1**

**<u>அலுவலகக்குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

18. தாராபுரம் நகராட்சி மூலம் அனைத்து வார்டுகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்படும் 12 எண்ணிக்கை தொட்டிகளிலும், தற்போது சோடியம் ஹைப்போ குளோரைட் லீக்யூடு குளோரினேசன் செய்யப்பட்டு செயல் பாட்டில் உள்ளது. 12 மேல்நிலைத் தொட்டிகளிலும் குடிநீர் உபயோகத்திற்காக நிரப்பப்படும் சோடியம் ஹைப்போ குளோரைட் (Liquired Chlorination) 10 நாட்களுக்கு ஒரு முறை மீண்டும் நிரப்பப்பட வேண்டும். எனவே ஒவ்வொரு மாதமும் மூன்று முறை தேவைப்படுகிறது. மேலும் தற்போது குறைந்த அளவு சோடியம் ஹைப்போ குளோரைட் (Liquired Chlorination) இருப்பு இருப்பதால் குடிநீர் பணி அவசர பணியாக இருப்பதால் ஏப்ரல் மாதத்தில் இருந்து நான்கு மாதஙகளுக்கு தேவையான சோடியம் ஹைப்போ குளோரைட் தேவைக்கேற்ப வாங்கி குடிநீர் உபயோகத்திற்கு பயன்படுத்திக் கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

19. தாராபுரம் நகராட்சி சந்தைப்பேட்டை பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள மீன் மார்க்கெட் கட்டடத்திற்கு முகப்பு தோற்றம், 16 கடைகளுக்கான மின் இணைப்புக்கான பஸ்பார் சேம்பர் அமைத்தல் மற்றும் சிறுநீர் கழிப்பறை மற்றும் வடிகாலுக்கு இரும்பு கிரில் மூடி அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதி வழஙகலாம்.
2) இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

20. தாராபுரம் நகராட்சி புதிய அலுவலக கட்டடத்தில் நகர்மன்ற தலைவர் அறை, நகர்மன்ற கூடம் அறை, நகராட்சி ஆணையர் அறை முகப்பு கதவுகளுக்கு முகப்பு அமைப்பு அமைத்தல் மற்றும் நகர்மன்ற கூடத்தில் நகர்மன்ற தலைவருக்கான மேடை அமைத்தல் மற்றும் நாற்காலிகள் அமைத்தல் பணிகளுக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.9,90,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதி வழஙகலாம்.
2) இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

21. தாராபுரம் நகராட்சி பழைய அலுவலக வளாகத்தில் நிரந்ததமாக உள்ள டேபிள்கள் கணிப்பொறி வைப்பதற்கு உள்ளது. மேலும் அஙகுள்ள அலுமினிய கண்ணாடி அடைப்புகள் போன்றவற்றை பிரித்து எடுத்து புதிய அலுவலகத்தில் வைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.28,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இப்பணியினை ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருவாளர்.விநாயகா கண்ஸ்டரக்சன் என்பவர் வசம் ஒப்படைப்பு செய்து பணி முடிக்கவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

22. தாராபுரம் நகராட்சி உட்பட்ட வார்டு எண்.20 ஜவகர் நகர் பகுதியில் மூடிய நிலையில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.9,90,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதி வழஙகலாம்.
2) இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

23. தாராபுரம் நகராட்சி அலுவலகத்தில் கணினி, இணையசேவை, காமரா, உள்தொலைபேசி இணைப்பு, மின்விளக்குகள் ஆகியவற்றின் பயன்பாடு மின்தடையின் போது தடையின்போது தடையின்றி செயல்பட UPS மிக அவசியமாகிறது. அதன்படி ஒவ்வொரு பிரிவிற்கும் தனிதனியே UPS & Battery பொருத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது இரண்டு UPS & Battery பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே கணினி, இணையசேவை, காமரா, உள்தொலைபேசி இணைப்பு, மின்விளக்குகள் ஆகியவற்றின் பயன்பாடு மற்றும் தேவையின் பொருட்டு பழுதடைந்த பழைய UPS & Batteryகளை மாற்றி புதிதாக இரண்டு UPS & Battery Government E-Market மூலம் பரிந்துரைக்கப்பட்டுள்ள DGS&D விலை விகிதத்தில் NUMERIC நிறுவன நேரடிவிற்பணையாளர் எஸ்.எஸ்.எலெக்ட்ரானிக் நிறுவனத்தின் மூலம் வாங்க ஆகும் உச்சே செலவினம் ரூ.3.18 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்.680 / 2019 / இ1**

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி தொகையினை நகராட்சி பொதுநிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

24. தாராபுரம் நகராட்சி போக்குவரத்து அதிகம் உள்ள சாலைகள் மற்றும் முக்கிய வீதிகளில் சாலை பாதுகாப்பு கருதி வெள்ளை கோடுகள் அமைக்கவும், வேகத்தடைகளுக்கு எச்சரிக்கை கோடுகள் அமைக்கவும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.7,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதி வழஙகலாம்.
2) இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

25. தாராபுரம் நகராட்சி 2019–20ஆம் ஆண்டிற்கான கணிணிகள், பிரிண்டர்கள், Modem Network, A/c ஆகியவற்றை ஆண்டு பராமரிப்பு செய்ய வேண்டியுள்ளதால் நகராட்சியின் பொதுநிதியின் கீழ்,

1, கணினிகள்

2, பிரிண்டர்கள்

3. Modems

4. Network

5. Switch

6. Intercom

ஆகியவற்றை பராமரிப்பு செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் **ரூ.**6,20,000/-**க்கு அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**26.** தாராபுரம் நகராட்சி TURIP திட்ட சாலைகள் இணைக்கும் பகுதிகளான சுந்தரம் அக்ரஹாரம் மற்றும் நாச்சிமுத்து புதூர் தெரு சந்துகளில் தார் தளம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.**9,90,000/–**க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதி வழஙகலாம்.
2) இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

27. தாராபுரம் நகராட்சி TURIP திட்ட சாலைகள் இணைக்கும் பகுதிகளான கண்ணன் நகர் மற்றும் பீமர் அக்ரஹாரம் சந்துகளில் தார் தளம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.**9,90,000/–**க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதி வழஙகலாம்.
2) இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

**28.** தாராபுரம் நகராட்சி உரக்கிடஙகு வளாகத்தில் புதிதாக Shredder Machine, Conveyor, Sanitary, Incinerator, Flier killer ஆகியன வாஙகுவதற்கு உத்தேசமாக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**9,90,000/–**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதி வழஙகலாம்.
2) இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

**29.** தாராபுரம் நகராட்சி வார்டு எண் 23–இல் உள்ள பெரிய காளியம்மன் கோவில் தெரு, பெரியார் கிழக்கு தெரு ஆகிய பகுதி சாலைகளில் பழுது ஏற்பட்டுள்ளது. அந்த சாலைகளுக்கு கப்பிதளம் (wetmix) அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,70,000/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதி வழஙகலாம்.
2) இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

**21.01.2019ந் தேதிய தாராபுரம் நகர்மன்றத் தீர்மான எண்.822 ன் நகல்**

தாராபுரம் நகராட்சிக்கு சொந்தமான பார்க் ரோட்டில் உள்ள புதியதாக கட்டப்பட்டுள்ள நகராட்சி அலுவலக கட்டிடத்தின் முகப்பு பகுதியில் 80 சதுரடி அளவில் ஆர்சிசி கட்டிடத்தில் ஏடிஎம் மிஷின் மாத வாடகை ரூ.8000க்கு வைத்துக்கொள்ள இந்தியன் வங்கி, தாராபுரம் கிளை மேலாளர் அவர்கள் சம்மத கடிதம் வழங்கியுள்ளார். எனவே, புதிய நகராட்சி அலுவலகத்தின் முகப்பு பகுதியில் பஞ்சாப் நேசனல் வங்கி தாராபுரத்திற்கு ஏடிஎம் வைக்க அனுமதி பெறப்பட்ட இடத்தின் அருகாமையில் நகராட்சியின் கணக்குகள் வைத்துள்ள இந்தியன் வங்கிக்கும் ஏடிஎம் மிஷின் வைத்துக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் வழியாக உரிய கருத்துரு அனுப்பி ஒப்படைப்பு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2799/2018/அ3

**நகர்மன்றத் தீர்மான எண்.822 நாள் 21.01.2019**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது

(ஒம்). இரா.லட்சுமணன்
ஆணையர் மற்றும்
தனிஅலுவலர்
தாராபுரம் நகராட்சி

// உண்மை நகல் //

மேலாளர்

தாராபுரம் நகராட்சிக்கு சொந்தமான பார்க் ரோட்டில் உள்ள புதியதாக கட்டப்பட்டுள்ள நகராட்சி அலுவலக கட்டிடத்தின் முகப்பு பகுதியில் 80 சதுரடி அளவில் ஆர்சிசி கட்டிடத்தில் ஏடிஎம் மிஷின் மாத வாடகை ரூ.8000க்கு வைத்துக்கொள்ள இந்தியன் வங்கி, தாராபுரம் கிளை மேலாளர் அவர்கள் சம்மத கடிதம் வழங்கியுள்ளார். எனவே, புதிய நகராட்சி அலுவலகத்தின் முகப்பு பகுதியில் பஞ்சாப் நேசனல் வங்கி தாராபுரத்திற்கு ஏடிஎம் வைக்க அனுமதி பெறப்பட்ட இடத்தின் அருகாமையில் நகராட்சியின் கணக்குகள் வைத்துள்ள இந்தியன் வங்கிக்கும் ஏடிஎம் மிஷின் வைத்துக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், திருப்பூர் வழியாக உரிய கருத்துரு அனுப்பி ஒப்படைப்பு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.2799/2018/அ3**